**மதுரை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை : திருமதி.கா.வானதி,**

**ந.க.எண்.76924/2012/ஊ.வ.–3** **நாள் : 10.04.2015.**

பொருள்: பணியமைப்பு – மதுரை மாவட்டம் – ஊரக வளர்ச்சி அலகு – போட்டித் தேர்வுகள் 2007 – 2008 மற்றும் 2012 – 2013–ஆம் ஆண்டிற்கான தொகுதி–IV–ல் அடங்கிய சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–III பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு பல்வேறு துறை / அலகிற்கு தேர்வாணையத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டு பின்பு பணியிடம் காலியின்மையால் தேர்வாணையத்திற்கு ஒப்புவிப்பு செய்யப்பட்டு மீண்டும் வேறு துறை / அலகிற்கு மறு ஒதுக்கீடு செய்யப்பட்ட தெரிவாளரின் பணியினை வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்.7027/PSD-B/2010, நாள் 16.11.2012.
2. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.A4/77195/2012, நாள் 29.11.2012.
3. மதுரை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.பஅ4/77195/2012, நாள் 30.06.2013.
4. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்.7027/PSD-B/2010, நாள் 26.07.2013.
5. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.72179/2013/ஊ.வ.–3, நாள் 15.10.2013.
6. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.72179/2013/ஊ.வ.–3, நாள் 17.02.2014.
7. இணைச் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண். 7027/PSD-B1/ST-TY/2013, நாள் 05.03.2015.

*****

**ஆணை:**

பார்வை 1–ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதத்தில், சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–III-ஆக செல்வி.ஆ.ராஜேஸ்வரி என்பவரை தெரிவு செய்து, மதுரை மாவட்டம், வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 2–ல் காணும் நடவடிக்கைகளின்படி மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், வருவாய் அலகில் பணிநியமனம் செய்யப்பட்டு, தனியர் 30.11.2012 முற்பகல் பணியேற்று, தொடர்ந்து 05.07.2013 வரை பணியாற்றியுள்ளார். பின்பு, பார்வை 3–ல் காணும் நடவடிக்கைகளின்படி மதுரை மாவட்ட வருவாய் அலகில் காலிப்பணியிடம் இல்லாத காரணத்தினால், தனியரை சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு மீள ஒப்புவிப்பு செய்யப்பட்டுள்ளார்.

(த.பி.பா.)

பார்வை 4–ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் மறு ஒதுக்கீட்டின் மூலம் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–III-ஆக செல்வி.ஆ.ராஜேஸ்வரி என்பவரை தெரிவு செய்து, மதுரை மாவட்டம், ஊரக வளர்ச்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பார்வை 5–ல் காணும் நடவடிக்கைகளின்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், ஊரக வளர்ச்சி அலகில் பணிநியமனம் வழங்கப்பட்டு, தனியர் 17.10.2013 முற்பகல் பணியேற்று, தொடர்ந்து இன்றுவரை பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 6–ல் காணும் நடவடிக்கைகளின்படி தனியரின் பணியை மதுரை மாவட்டம், ஊரக வளர்ச்சி அலகில் அவர் பணியில் சேர்ந்த நாளான 17.10.2013 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது. பார்வை 7–ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதத்தில்,

> " தேர்வாணைய மூலம் பல்வேறு துறை / அலகுகளுக்கு மறு ஒதுக்கீடு செய்யப்பட்ட சுருக்கெழுத்து தட்டச்சர்களுக்கான பணியினை அரசாணை எண்.292, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 02.04.1987–ன்படி அவர்கள் முதலில் பணியில் இணைந்த துறை / அலகில் பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறை செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ''

எனவே, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, பார்வை 6–ல் காணும் நடவடிக்கையின் மூலம் தனியருக்கு வழங்கப்பட்ட பணிவரன்முறை நாளை இரத்து செய்து, அன்னார் முதலில் மதுரை மாவட்டம், வருவாய் அலகில் பணியேற்ற நாளான 30.11.2012 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்தும் இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

மேலும், இப்பணிவரன்முறை தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற கிளைகள் மற்றும் வேறு நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு, விசாரணையில் உள்ள வழக்குகள் சென்னை & மதுரை உயர்நீதிமன்ற கிளைகளில் நிலுவையில் உள்ள வழக்குகளின் இறுதி நீதிமன்றத் தீர்ப்பிற்கு உட்பட்டது என தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவரின்
நேர்முக உதவியாளர் (வளர்ச்சி),
மதுரை.

10/4/2015

பெறுநர்:
செல்வி.ஆ.ராஜேஸ்வரி,
சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–III,
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் (ஊரக வளர்ச்சி அலகு),
மதுரை.

நகல் – பணிந்து அனுப்பப்படுகிறது.

1. இயக்குநர்,
   ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம் **(B1 Section),**
   பனகல் மாளிகை, சைதாப்பேட்டை,
   சென்னை –600 015. (பதிவஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்)
2. செயலாளர்,
   தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், **(PSD-B1) (ST-TY)**
   எண்.3, ப்ரேசர் பாலச் சாலை, வ.உ.சி.நகர்,
   சென்னை – 600 003. (பதிவஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்)
3. ஊ.வ.–1 பிரிவு / ஊ.வ.–3 இருப்பு கோப்பு.